திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் இருக்கின்ற சித்தோடு மகளிர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருமாறு அன்போடு வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் கேட்டதற்குப் பிறகு நான் என்ன சொல்வது, செய்தே ஆக வேண்டும், செய்து முடிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 62, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எஸ். முத்தையா, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

62—

நியாய விலைக் கடை

***10044— டாக்டர் எஸ். முத்தையா:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியம், அரியகுடி கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, பரமக்குடி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கட்டுப்பாட்டில், அரியகுடி பகுதியில் 505 குடும்ப அட்டைகளுடன் ஒரு முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வரும் நிலையில், புதிய நியாய விலைக் கடை

அமைப்பதற்கான அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எஸ். முத்தையா அவர்கள்.*

டாக்டர் எஸ். முத்தையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூடி இமை தானிருக்க, முகம் மலர்ந்து பொலிவுற்றிருக்க, சிவப்பு முகம் செக்கச் சிவந்திருக்க, சிரிப்பு எங்கே போச்சுதம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) வீதி வழி நான் பார்த்திருக்க, பார்த்த விழிகள் எல்லாம் நீர் சுமக்க, போன இடம் கடற்கரையா! உங்கள் புகழ் உலகம் மறக்கலையே! புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில், வடக்கு குடியிருப்பு, தெற்கு குடியிருப்பு, நடு குடியிருப்பு என மூன்று பகுதிகளைக்கொண்டு, சுமார் 2,000 மக்கள் வசிக்கின்ற அரியகுடி கிராமத்தில் நியாய விலைக் கடை அமைத்துக் கொடுத்த அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி, அந்தக் கடைக்கு நிரந்தரக் கட்டடம் கட்டித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். மேலும், அக்கிராமத்திற்கு அருகில் உள்ள மந்திவலசை, மாவிளங்கை, தேவேந்திரநல்லூர், மணக்குடி போன்ற கிராமங்களில் கூடுதல் மற்றும் பகுதிநேர நியாய விலைக் கடைகள் அமைத்துத் தரும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் முத்தையா அவர்களின் கோரிக்கைக்கு மாண்புமிகு முதலமைச்சரின் ஆலோசனை மற்றும் உரிய நிதி பெற்று, புதிய கட்டடம் அமைப்பதற்கு துறை ரீதியான ஆய்வுகள் செய்து, அதற்கான வழிமுறைகள் காணப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

பகுதிநேரக் கடை அமைப்பதற்கு குறைந்தது 150 கார்டுகள் இருக்க வேண்டும். மலைப் பிரதேசமாக இருந்தால், 100

கார்டுகள் இருக்க வேண்டுமென்ற விதி உள்ளது. கிராமப்புறங்களில் தாய்க் கடையில் குறைந்தபட்சம் 500 கார்டுகள் இருக்க வேண்டும். நகர்ப்புறங்களில் 800 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டுமென்ற விதி உள்ளது. பகுதிநேரக் கடை, தாய்க் கடையிலிருந்து 1½ கிலோ மீட்டர் தூரத்தில் இருக்க வேண்டும். எனவே, இதுபோன்ற விதிகளுக்குட்பட்டு இருக்கும்பட்சத்தில், நிச்சயமாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதுபோல், பகுதிநேர நியாய விலைக் கடை அமைப்பதற்கு துறை சார்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், சமூக ரீதியாகப் பாதிக்கப்படும் பழங்குடியின மக்கள் இருக்கின்ற பகுதிகளில், சட்டம்—ஒழுங்கு பாதிக்கப்படக்கூடிய நிலையிருந்தால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே தன் விருப்புரிமையின் அடிப்படையில் அரசாணை (நிலை) எண் 63, நாள் 11—3—1997—ன்கீழ் நடவடிக்கை எடுக்கலாம். எனவே, இதைக் கணக்கில் கொண்டு, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு விரைவாகப் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எஸ். முத்தையா அவர்கள்.

டாக்டர் எஸ். முத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உரித்தாக்கி நன்றியோடு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள்.

முற்பகல் 10—15

திரு. சு. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மதுராந்தகம் தொகுதிக்குட்பட்ட அச்சரப்பாக்கம் ஒன்றியத்தில் வேடந்தாங்கல், மதுராந்தகம் ஒன்றியத்தில் மேலவலம்பேட்டை, சூரைகுளம், மதுராந்தகம் நகராட்சியிலே, கருங்குழி ஆகிய 4 இடங்களில் ரேஷன் கடைகள் இதுவரை

திறக்கப்படவில்லை. அதுவும் கலைஞர் ஆட்சியிலே கட்டப்பட்ட 2 ரேஷன் கடைகள், இந்த நாள் வரை திறக்கப்படவில்லை. கடந்த முறை இதே கேள்வியை துணைக் கேள்வியாக நான் கேட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொன்னார்கள் என்றால், அது எந்தக் காரணத்திற்காகத் திறக்கப்படவில்லை என்பதை ஆய்வு செய்து வந்தால் திறப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று சொன்னார்கள். நான் ஒரு சாதாரண சட்டமன்ற உறுப்பினர். இந்த அவையை மதித்து பேசுகின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எந்தக் காரணத்திற்காகத் திறக்கவில்லை என்பதை அவரே ஆய்வு செய்து, கடையைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்திருக்க வேண்டுமேயொழிய, என்னைப் பார்த்துக் கேட்கக் கூடாது. இன்னும் கேட்கிறேன். மதுராந்தகம் தொகுதியிலே முன்பிருந்த அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய உறுப்பினர் திருமதி கனிதா சம்பத் அவர்கள் மதுராந்தகம் நகரத்திலே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அவரால் கட்டப்பட்ட காந்திநகர் ரேஷன் கடை இதுவரை திறக்கப்படவில்லை. இவற்றைத் திறப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

ஒரு சின்ன செய்தி. பெரிய விஷயம் இல்லை. முதல் கேள்விக்குப் போகிறேன். முதல் கேள்வி கேட்டவர் திரு. நடராஜன், பதில் சொல்பவர் மாண்புமிகு அமைச்சர் அவர்கள். கேள்வி கேட்டவர்களைப் பார்த்தால் இராமலிங்கம், நடராஜன், ரங்கநாதன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இதையெல்லாம் கேட்கக் கூடாது. திரு. புகழேந்தி, நீங்கள் கேள்வியைத்தான் கேட்கவேண்டும்.

திரு. சு. புகழேந்தி: நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதைக் கேட்டுக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள், சொல்லுங்கள்.

திரு. சு. புகழேந்தி: அந்தத் துறைக்குள்ளே நான் போகவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தேவையில்லாததைச் சொன்னால் நீக்கி விடுவேன். நல்லதாகச் சொல்லுங்கள்.

திரு. சு. புகழேந்தி: தேவையில்லாததைச் சொல்லமாட்டேன். முதல் கேள்வி கேட்டவர் திரு. நடராஜன், துணைக் கேள்விகளைக் கேட்டவர்கள் திரு. இராமலிங்கம் மற்றும் திரு. ரங்கநாதன் ஆகியோர் மூன்று பேருமே சாமி. அதனால்தான் உடனே பரிசீலிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருப்பார் என்று கருதுகிறேன். வேறொன்றும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சிறந்த பேச்சாளர். மேடையிலே 2 மணி நேரம்கூட பேசக்கூடியவர். எனவே, இங்கே வந்து அவருடைய நகைச்சுவை உணர்வைக் காண்பிக்கின்றார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வது, இதுவரை 20 கடைகள் திறக்கப்படாமல் இருக்கின்றன. காரணம் என்னவென்றால், மின் இணைப்பு கிடைக்காமல் இருப்பது அல்லது அந்தக் கட்டடத்தை உரிய சங்கத்திற்கு எழுதிக் கொடுத்திருக்காமல் இருப்பது, பத்திரம் மூலமாக அந்தச் சங்கத்திற்கு உரிய முறையில் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அனுமதி பெற்று கட்டிக்கொடுக்க வேண்டும். அந்தக் கட்டடத்தை ரேஷன் கடை நடத்துவதற்கு நாங்கள் அனுமதிக்கிறோம் என்று கொடுக்கவேண்டும். அல்லது உள்ளூர் மக்கள் எதிர்ப்பு தெரிவித்திருக்க வேண்டும். இப்படி ஏதாவது ஒரு காரணத்தினால்தான் 20 கடைகள் மட்டும் திறக்கப்படாமல் இருக்கின்றன. ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி சொன்னார். நான் ஏற்கெனவே துறை ரீதியாகக் கேட்டிருக்கிறேன். இன்று மாலைக்குள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, எதனால் அந்தக் கடை திறக்கப்படாமல் இருக்கிறது, திருமதி கனிதா சம்பத், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எந்த முறையிலே கட்டினார், கட்டிய கடை எதனால் திறக்கப்படாமல் இருக்கிறது என்பதை உறுதியாக அறிந்து, தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.

2017 ஜூன் 22]

டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆலங்குளம் தொகுதியிலுள்ள 4 ஒன்றியங்களான, கடையத்தில் உள்ள பண்டாரகுளம், கருத்தலிங்கபுரம், முப்பளியூர் கோதண்டராமபுரம், நெல்லையப்பபுரம், பொட்டல்புதூர் புதுத்தெரு, ஆழ்வார்குறிச்சி, வாகைக்குளம், அங்கபுரம், கேளாபிள்ளையூர், தட்டாம்பட்டி, ஆலங்குளம் ஒன்றியத்திலுள்ள நெட்டூர் 1—ஆவது காலனி, மருதம்புதூர், சண்முகாபுரம், கீழப்பாவூரில் உள்ள பெத்தநாடார்பட்டி, அருணாபேரி, சுப்ரமணியபுரம், பாக்கியலட்சுமிபுரம், பாப்பாகுடியில் உள்ள ஆனையபுரம், வடக்கு அரியநாயகிபுரம், ரெங்கசமுத்திரம், புதுகிராமம் ஆகிய 20 இடங்களில் ஒருசில இடங்களில் பகுதிநேரக் கடையும் ஒருசில இடங்களில் முழுநேரக் கடையும் தேவை. 20 கடைகளையும் ஒரே சமயத்தில் அமைத்துத் தருவது சாத்தியமாகாத ஒன்றாக இருந்தாலும், தயவு செய்து முக்கியமான 3 கடைகளை உடனே தருமாறு நான் கடந்த ஒரு வருட காலமாக மாவட்ட ஆட்சியரிடமும், இங்குள்ள அரசுச் செயலாளர் அவர்களிடமும் தொடர்ந்து கடிதம் எழுதி வரும்பொழுது அவர்கள் எனக்கு அளித்த பதில், இப்போது ஸ்மார்ட் கார்டு டெலிவரி செய்துகொண்டிருக்கின்றோம். அனைவருக்கும் ஸ்மார்ட் கார்டு கொடுத்து முடித்தபிறகுதான், புதிய நியாய விலைக் கடைகளை அமைப்போம் என்று கூறினார்கள். நீங்கள் எப்போது ஸ்மார்ட் கார்டுகளைக் கொடுத்து முடிப்பீர்கள்? 5 கிலோ மீட்டர், 8 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்ற கடைகளிலிருந்து அரிசியையும், மண்ணெண்ணெய்யையும் வாங்குகின்ற அவல நிலையிலிருந்து எப்போது மக்கள் மீள்வார்கள்? சில நேரங்களில் அங்கு போய்ச் சேருவதற்குள்ளாக அரிசி காலியாகி விடுகிறது. முக்கியமாக எண்ணெய் காலியாகிவிடுகிறது. பருப்பு காலியாகி விடுகிறது. என்னுடைய தொகுதி முழுக்க, முழுக்க கிராமங்கள் நிறைந்த தொகுதியாகும். சில இடங்களில் மலைப்பாங்கான பகுதியில் கடை அமைந்துள்ளது. மேலும், சில நேரங்களில், இது உணவுத் துறையில் இருக்கிறது; இது கூட்டுறவுத் துறையில் இருக்கிறது என்று மாற்றி, மாற்றி அதிகாரிகள் பதில் சொல்கின்றனர். தயவு செய்து ஸ்மார்ட் கார்டு கொடுப்பதையும், புதிய நியாய விலைக் கடை அமைப்பதையும் இணைத்துப் பார்க்காமல், தகுந்த நடவடிக்கைகளை இவ்வரசு எடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

[2017 ஜூன் 22

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அமைந்த பிறகு, 645 முழு நேரக் கடைகள், 1,581 பகுதிநேரக் கடைகள், ஆக மொத்தம் 2,226 கடைகள் 31–5–2017 வரை திறக்கப்பட்டு பொருட்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. மக்களுக்கு தங்குதடையின்றி ரேஷன் பொருட்கள் கிடைக்க வேண்டுமென்ற அடிப்படையிலும், அவர்களுக்கு வீண் அலைச்சல் ஏற்படக் கூடாது, சிரமப்படக் கூடாது என்ற அடிப்படையிலும் மாண்புமிகு அம்மா அவர்கள் இவற்றை செய்திருக்கிறார்கள். மேலும், 37 நகரும் நியாய விலைக் கடைகளையும் கொடுத்திருக்கிறார்கள். திருப்பூர் மாவட்டத்தில் 70 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள குழிப்பட்டி என்ற மலைக்கிராமத்திற்கு, ஏறத்தாழ 26 கிலோ மீட்டர். . . (குறுக்கீடு) இல்லை, நான் சொல்கிறேன், இதுபோன்றெல்லாம் கொடுத்தது. . . (குறுக்கீடு) மாண்புமிகு முன்னாள் அமைச்சர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 20 கடைகள்* pending *இருப்பதாகச் சொன்னார்கள். நான், ஏற்கெனவே சட்டவிதிகளைச் சொன்னேன். அந்த விதிகளுக்குட்பட்டு வந்தால், 150 கார்டுகள் இருந்தால் போதும், மாவட்ட ஆட்சித் தலைவரே பகுதிநேர கடைகளைத் திறக்கலாம். அதேநேரத்தில், தாய்க் கடையில், அந்தக் கார்டுகளை பிரித்த பிறகு, 500 கார்டுகள் இருக்க வேண்டும்; ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும். இவ்வாறு இருக்கும்பட்சத்தில், எந்தவித ஆட்சேபணையும் இல்லை. இந்த விதிகளிலிருந்து முரண்பாடு இருக்கும்பட்சத்தில், நம்முடைய உணவுத் துறை அமைச்சரிடம் கொடுக்க வேண்டும்.*

இரண்டாவது, ஸ்மார்ட் கார்டுகளைப் பொறுத்தளவில், இப்போது கொடுக்கப்பட்டு வருகின்றன. விரைவாகக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். வரும் ஜூலை மாதத்திற்குள் அது முடிவுற்றுவிடும். எனவே, நிச்சயமாக ஸ்மார்ட் கார்டு வழங்குகின்ற காரணத்தினால்தான்—எந்தெந்த கார்டு, எந்தெந்த பகுதிநேரக் கடைகளுக்கு போகும் என்று பிரித்துக் கொடுக்க வேண்டிய சூழ்நிலையில்தான், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இதுபோன்று காலதாமதப்படுத்தியிருக்கிறார். எனவே, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லி விரைவாக முடிக்கப்படும்.

2017 ஜூன் 22]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் கோரிய இடங்களில்கூட ஏறத்தாழ 82 கடைகளை நாம் திறந்திருக்கின்றோம். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி வந்தபிறகு, இந்த 6 ஆண்டுகளில் 22 முழுநேரக் கடைகள், 60 பகுதிநேரக் கடைகள் என மொத்தம் 82 கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. எனவே, மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களைக் கொடுப்பதில் எந்தவித தங்குதடையும் இருக்கக் கூடாது என்பதில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது உறுதியாக இருக்கிறது. மேலும், கடைக்குப் போகும்போது, எல்லாப் பொருட்களும் காலியாகி விடுகின்றன என்று சொன்னீர்கள். அது தவறான தகவல். நிச்சயமாக அதுபோன்று இல்லை. அதற்குத்தான், SMS *வசதி எல்லாம் இப்போது வந்திருக்கிறது. இன்றைக்கு, மின்னணு தொழில்நுட்ப வசதி செய்யப்பட்டிருக்கிறது. எனவே, நியாய விலைக் கடைகளில் என்னென்ன பொருட்கள் இருக்கின்றன என்பதை அறிந்துகொள்ள 102 என்ற எண்ணுக்கு தொடர்புகொண்டால் போதும், அந்தக் கடையினுடைய* stock position *தெரிந்துவிடும். எனவே, என்னென்ன பொருட்கள் இருக்கின்றன என்பதைத் தெரிந்துகொண்டு உடனே நாம் அங்கு சென்று, வாங்கிவிடலாம். எனவே, யாரும் அலையக் கூடாது என்பதற்காகத்தான், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இதுபோன்ற நடவடிக்கையை, இந்தியாவில் எந்தவொரு முதலமைச்சரும் செய்யாத நடவடிக்கையை எடுத்திருப்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, விரிவாக, விளக்கமாகச் சொல்லிவிட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 63, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

63—

துணை மின் நிலையம்

***3220—திரு. தா.மோ. அன்பரசன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—